நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர் – நீலகிரி மாவட்டம்.

## சாதாரணக்கூட்டம் 30/04/2018 திங்கள்கிழமை

**பொருள் எண்.1**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்பு கோரும் விண்ணப்பதாரர்கள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய முன் வைப்புத்தொகையினை (குடியிருப்பு ரூ.3000/–, வணிகம் ரூ.5000/– மற்றும் தொழிற்சாலைகள் ரூ.10000/–) மூன்று தவணைகளில் நகராட்சிக்கு செலுத்திக்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.2**

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மத்திய, மாநில மற்றும் நகராட்சி நிதி உதவியுடன் தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு மீண்டும் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தெரிவித்த அறிவுரையின்படி நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் 753 வீடுகளில் தனிநபர் கழிப்பிடம் கட்ட இடவசதி உள்ளது என கண்டறியப்பட்டது.

இதற்கு தேவையான நிதி விவரம் பின்வருமாறு.

1. மத்திய அரசின் பங்குத்தொகை
   (ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.4000/– வீதம் 753க்கு) - 30.12 இலட்சம்
2. மாநில அரசின் பங்குத்தொகை
   (ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.2000/– வீதம் 753க்கு) - 15.06 இலட்சம்
3. நகராட்சியின் பங்குத்தொகை
   (ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.2000/– வீதம் 753க்கு) - 15.06 இலட்சம்

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தனிநபர் கழிப்பிடம் கட்ட மத்திய, மாநில அரசுகளில் நிதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும், நகராட்சியின் பங்குத்தொகை ரூ.15.06 இலட்சம் பொது நிதியிலிருந்து 753 பயனாளிகளுக்கு வழங்கவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அத்தியாவசியம் கருதி பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த மானியத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொண்டு பின்னர் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து வரும் மானியத் தொகையினை பொது நிதிக்கு வரவு வைத்துக்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.3**

நெல்லியாளம் நகராட்சி பொறியியல் பிரிவு புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால், மேற்படி புதிய பொறியியல் பிரிவில் கணிணிகள் பயன்படுத்த தேவையான 5 KVS UPS ஒன்று சப்ளை செய்தல், UPS கணிணிகளுடன் இணைக்க ஒயரிங் பணிகள் செய்தல் மற்றும் கணிணிகள் இணையத்தில் இணைக்க கணிணிகளுக்கான நெட்ஒர்க்கிங் சுவிட்சுகள் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு 02/04/2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த சதவிகிதம் |
|---|---|---|
| 1) | பிளாஸ்நெட் கம்யூட்டர் சென்டர், கூடலூர் | 0.24% அதிகம் |
| 2) | கிங்ஸ் கம்யூட்டர் சென்டர், பந்தலூர் | 0.12% குறைவு |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தவிலை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள கிங்ஸ் கம்யூட்டர் சென்டர், பந்தலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.
2. பொறியியல் பிரிவு பணியின் அவசர, அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று கிங்ஸ் கம்யூட்டர் சென்டர், பந்தலூர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதும், பட்டியல் தொகை வழங்கியதும் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முதியோர் உதவித்தொகை மற்றும் இதர உதவித்தொகைகள் பெற வறுமைக்கோடு பட்டியலில் பெயர் சேர்த்து பட்டியல் எண் வழங்ககோரி பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு வறுமைக்கோடு பட்டியல் எண் வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | பட்டியல் எண் |
|---|---|---|
| 1 | திருமதி.ஞான உதயம், க.பெ.சின்னப்பன், க.எண்.19/60, புஞ்சவயல், உப்பட்டி. | OAP BPL No.96 |
| 2 | திரு.ராமலிங்கம், த.பெ.சின்னையா, க.எண்.10/149, திருவள்ளுவர்நகர், தேவாலா | OAP BPL No.97 |
| 3 | திரு.தங்கவேல், த.பெ.முத்தன், க.எண்.ப.எண்.6/734, பு.எண்.8/467, நாடுகாணி | OAP BPL No.98 |
| 4 | திருமதி.பழனியம்மாள், க.பெ.சொக்கலிங்கம், க.எண்.9/158Z20, நீர்மட்டம், தேவாலா. | OAP BPL No.99 |
| 5 | திருமதி.வள்ளியம்மாள், க.பெ.நடேசன், க.எண்.13/68, காலணி சாலை, பந்தலூர். | OAP BPL No.100 |
| 6 | திருமதி.சந்திரமதி, க.பெ.ராஜேந்திரன், க.எண்.11/271, தேவாலா பஜார். | OAP BPL No.101 |

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.5**

நெல்லியாளம் நகராட்சி பொதுப்பிரிவு மற்றும் வருவாய் பிரிவிற்கு தேவையான இரப்பர் முத்திரைகள் (Rupper Stamp) செய்து வாங்கியமைக்கு பட்டியல் தொகை ரூ.2960/– திரு.எம்.எஸ்.ஜெயசீலன், கோல்டன் ஜெராக்ஸ், பந்தலூர் அவர்களுக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.6**

நெல்லியாளம் நராட்சி வருவாய் பிரிவிற்கு பீரோ இரண்டு, அ4 எழுத்தருக்கு பீரோ ஒன்று மற்றும் மேஜை ஒன்று மற்றும் ப்ளாஸ்க் இரண்டு எண்ணம் ஆகியவை சப்ளை செய்யும் பணிக்கு 19/04/2018 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளிகள் விவரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | ஸ்ரீ விநாயகா டிஸ்டிபியூட்டர்ஸ், பந்தலூர் | ரூ.65000/– |
| 2 | விக்னேஷ்வரா ரேடியோஸ், பந்தலூர் | ரூ.60000/– |
| 3 | பிரியா பர்னிச்சர்ஸ், உப்பட்டி | ரூ.62400/– |

**அலுவலககுறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தவிலை விலைப்புள்ளி அளித்துள்ள விக்னேஷ்வரா ரேடியோஸ், பந்தலூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.7**

நெல்லியாளம் நகராட்சி பொதுப்பிரிவு மற்றும் பொதுசுகாதாரப்பிரிவிற்கு கணிணிகள் இரண்டு, A3 Size ஸ்கேனிங் வசதியுடன் கூடிய பிரிண்டர் (ஜெராக்ஸ் மிசின்) ஒன்று, கணிணி வரிவசூல் மையத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய ஸ்கேனர் ஒன்று மற்றும் லேசர் பிரிண்டர் ஒன்று தேவைப்படுகிறது. தற்போது 01/07/2017 முதல் GST வரி நடைமுறையில் வந்ததால் கணிணி மற்றும் பிரிண்டர்களின் விலை அதிகமாக உள்ளதாலும், 2017–2018 ஆம் ஆண்டிற்கான DGS&D அரசு விலை விகிதம் பெறப்படாமல் உள்ளதாலும், 2016 ஆம் ஆண்டு DGS&D அரசு விலை விகிதத்தின்படி ஏற்கெனவே கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் கொள்முதல் செய்யப்பட்ட M/s.Spyder Technology, Salem நிறுவனத்திடம் மேற்படி கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.250000/–ற்கு தனி அலுலலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.8 – பணி எண்.1**

பொது நிதியின் கீழ் 2018–2019ம் ஆண்டில் பந்தலூர் கட்டண கழிப்பிட கறைகள் அகற்றுதல், பூதானக்குன்னு, சோலவயல் பகுதியில் உள்ள பம்பு அறை பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.10.00 இலட்சத்திற்கு 28.03.2018ம் நாள் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.தேவேந்திரன் | 0.05% குறைவு |
| 2 | திரு.பாபுவர்கீஸ் | 1. % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டுத் தொகையை விட (–) 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.தேவேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.8 – பணி எண்.2**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் மின் மோட்டார் பழுது நீக்ககம் பணிகள் மேற்கொண்டதற்கம், மின்மோட்டார் சர்வீஸ் ஒயர் மற்றும் கேபிள் ஒயர் மாற்றி அமைத்தமைக்கு எம்/எஸ்.மீரா எலக்ட்ரிக்கல், கூடலூர் என்பவருக்கு தொகை வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | இடத்தின் பெயர்/வேலை | ஒப்பந்ததாரரின் பெயர் / தொகை | | |
|---|---|---|---|---|
| | | மீரா எலக்ட்ரிக்கல்ஸ் | அனிபா எஞ்ஜினியரிங் | ஸ்டார் எஞ்ஜினியரிங் |
| 1 | தேவாலா அம்பலக்கொல்லி மின்மோட்டார் | 19900.00 | 20000.00 | 19950.00 |
| 2 | ஆமைக்குளம் காலணி மின்மோட்டார் | 19900.00 | 19950.00 | 20000.00 |
| 3 | நாரங்கவயல் மின்மோட்டார் | 19850.00 | 19950.00 | 19900.00 |
| 4 | குன்டில்கடவு மின்மோட்டார் | 19950.00 | 20000.00 | 20000.00 |
| 5 | ஏலமன்னா காசி மின்மோட்டார் | 19900.00 | 19950.00 | 20000.00 |
| 6 | பெருங்கரை சோமன் மின்மோட்டார் | 19950.00 | 20000.00 | 19980.00 |
| 7 | ஒலிமடா வி.எஸ் மின்மோட்டார் | 19950.00 | 20000.00 | 20000.00 |
| 8 | மேங்கோரேஞ் மின்மோட்டார் | 19850.00 | 19900.00 | 20000.00 |
| 9 | கூமூலா மின்மோட்டார் | 19850.00 | 20000.00 | 19950.00 |
| 10 | சேலக்குன்னு டீசல் எஞ்சின் | 19900.00 | 19950.00 | 20000.00 |

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.8 – பணி எண்.3**

நெல்லியாளம் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடத்தில் உள்ள மின் உபகரணங்கள் மற்றும் மின்விளக்குகள், மின்விசிறிகள் பழுதடைந்து உள்ளதை மாற்றி அமைக்க தோராயமான செலவுத்தொகை ரூ.50000/–த்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்

**தனி அலுவலர்,**
**நெல்லியாளம் நகராட்சி.**